IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.No. 94/2024 - PW-3

| | |
|---|---|
| Name | திரு. ராஜேந்திரன் |
| Husband/Father Name | ரத்தினநாயுடு |
| Village /Area | கன்னிகாபுரம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | விவசாயம் |
| Age | 75 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.07.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். பிப்ரவரி 2010ம் ஆண்டு நான் மேல்பாக்கத்திற்கு என் உறவினர் வீட்டுக்கு சென்றிருந்தேன். அப்போது திருட்டு நடந்து விட்டதாக 3 நபர்களை போலீசார் பிடித்து வைத்து SR gate அருகே விசாரித்து கொண்டிருந்தார்கள். மேற்படி 3 நபர்களும் அவர்கள் செய்த தவறை ஒப்புக் கொண்டு வாக்குமூலம் அளித்ததை போலீசார் பதிவு செய்து கொண்டார்கள். அ.சா.2ம் அந்த சமயத்தில் அங்கு இருந்தார். மேற்படி நபர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் மற்றொரு நபர் முன்னிலையிலும் போலீசார் பதிவு செய்து கொண்டார்கள். மற்றொரு நபரின் பெயர் எனக்கு தெரியவில்லை. மேற்படி நபர்கள் எடுத்து கொடுத்த பொருட்களை போலீசார் மகஜரில் கைப்பற்றி கொண்டார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி அருண் எடுத்து ஆஜர் செய்த கருப்பு பிளாஸ்டிக் பிடியுடன் கூடிய கத்தி, கருப்பு பட்டை போட்ட watch ஒன்று மகஜரில் கைப்பற்றப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மற்றொரு எதிரி சுமன்(எ)ரவிகுமார் எடுத்து ஆஜர் செய்த கட்டை பிடியுடன் இரும்பு வளையம் போட்ட கத்தி ஒன்று, ரூ.100/- நோட்டு ஒன்று, ரூ.10/- நோட்டு இரண்டு ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

அது **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி வெங்கட்(எ)வெங்கடேசன் எடுத்து ஆஜர் செய்த வேலிகாத்தான் கொம்பு மகஜரில் கைப்பற்றப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கு சொத்துகளான கருப்பு பிளாஸ்டிக் பிடியுடன் கூடிய கத்தி, கட்டை பிடியுடன் இரும்பு வளையம் போட்ட கத்தி ஒன்று, வேலிகாத்தான் கொம்பு ஆகியவை எங்கள் முன்னிலையில் போலீசாரால் கைப்பற்றப்பட்டது தான். அவைகள் முறையே **சா.பொ.1 முதல் சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வழக்கு சொத்தை அடையாளம் காட்ட வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.07.07 17:14:18 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.